## டிசம்பர் – 29 – வெள்ளி

### புனித தோமஸ் பெக்கட்

### ஏனெனில், ஆண்டவர் மாட்சிமிக்கவர்: திபா. 96:4

## முதல் வாசகம் : 1 யோவான் 2 : 3 – 11

என் பிள்ளைகளே, அவருடைய கட்டளைகளை நாம் கடைப்பிடித்தால் நாம் அவரை அறிந்து கொண்டோம் என்பது உறுதியாகத் தெரியும். "அவரை எனக்குத் தெரியும்" எனச் சொல்லிக்கொண்டு அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிக் காதோர் பொய்யர் உண்மை அவர்களிடம் இராது. ஆனால் அவரது வார்த்தையைக் கடைப்பிடிப்போரிடம் கடவுளின் அன்பு உண்மையாகவே நிறைவடைகிறது நாம் அவரோடு இணைந்து இருக்கிறோம் என அதனால் அறிந்துகொள்ளலாம். அவரோடு இணைந்திருப்பதாகக் கூறுவோர் அவர் வாழ்ந்தவாறே வாழக் கடமைப்பட்டவர்கள். அன்பிற்குரியவர்களே! நான் உங்களுக்கு எழுதுவது புதியதொரு கட்டளை அல்ல. நீங்கள் தொடக்கத் திலிருந்தே பெற்றிருந்த பழைய கட்டளை தான் அது. நீங்கள் கேட்டறிந்த வார்த்தையே அப்பழைய கட்டளை. இருப்பினும் நான் உங்களுக்கு எழுதுவது ஒரு புதிய கட்டளையே. அது புதியது என்பது கிறிஸ்துவின் வாழ்விலும் உங்கள் வாழ்விலும் விளங்குகிறது. ஏனெனில் இருள் அகன்று போகிறது உண்மை ஒளி ஏற்கெனவே ஒளிர்கிறது. ஒளியில் இருப்பதாகச் சொல்லிக் கொண்டு தம் சகோதரர் சகோதரிகளை வெறுப்போர் இருளில்தான் இருக்கின்றனர். தம் சகோதரர் சகோதரிகளிடம் அன்பு கொள்வோர் ஒளியில் நிலைத்திருக்கின்றனர் இடறி விழவைக்கும் எதுவும் அவர்களிடம் இல்லை. தம் சகோதரர் சகோதரிகளை வெறுப்போர் இருளில் இருக்கின்றனர் இருளில் நடக்கின்றனர். அவர்கள் எங்குச் செல்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. ஏனெனில் இருள் அவர்களுடையக் கண்களைக் குருடாக்கிவிட்டது.

**பதில்பாடல்:** விண்ணுலகம் மகிழ்வதாக மண்ணுலகம் களிகூர்வதாக

## நற்செய்தி : லூக்கா 2 : 22 - 35

அக்காலத்தில், மோசேயின் சட்டப்படி தூய்மைச் சடங்கை நிறைவேற்றவேண்டிய நாள் வந்தபோது குழந்தையை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க அவர்கள் எருசலேமுக்குக் கொண்டு சென்றார்கள். ஏனெனில், "ஆண் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும்" என்று அவருடைய திருச்சட்டத்தில் எழுதியுள்ளது. அச்சட்டத்தில் கூறியுள்ளவாறு ஒருசோடி மாடப்புறாக்கள் அல்லது இரு புறாக்குஞ்சுகளை அவர்கள் பலியாகக் கொடுக்க வேண்டியிருந்தது. அப்போது எருசலேமில் சிமியோன் என்பவர் இருந்தார். அவர் நேர்மையானவர் இறைப்பற்றுக் கொண்டவர் இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்ட ஆறுதலை எதிர்பார்த்திருந்தவர் தூய ஆவியை அவர் பெற்றிருந்தார். "ஆண்டவருடைய மெசியாவைக் காணுமுன் அவர் சாகப்போவதில்லை" என்று தூய ஆவியால் உணர்த்தப் பட்டிருந்தார். அந்த ஆவியின் தூண்டுதலால் அவர் கோவிலுக்கு வந்திருந்தார். திருச்சட்ட வழக்கத்திற்கு ஏற்பச் செய்ய வேண்டியதைக் குழந்தை இயேசுவுக்குச் செய்து முடிக்கப் பெற்றோர் அதனை உள்ளே கொண்டுவந்தபோது. சிமியோன் குழந்தையைக் கையில் ஏந்திக் கடவுளைப் போற்றி, "ஆண்டவரே, உமது சொற்படி உம் அடியான் என்னை இப்போது அமைதியுடன் போகச் செய்கிறீர். ஏனெனில் மக்கள் அனைவரும் காணுமாறு, நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன. இம்மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி இதுவே உம் மக்களாகிய இஸ்ரயேலுக்குப் பெருமை" என்றார். குழந்தையைக் குறித்துக் கூறியவை பற்றி அதன் தாயும் தந்தையும் வியப்புற்றனர். சிமியோன் அவர்களுக்கு ஆசிகூறி, அதன் தாயாகிய மரியாவை நோக்கி, "இதோ, இக்குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும் எதிர்க்கப்படும் அடையாள மாகவும் இருக்கும். இவ்வாறு பலருடைய மறைவான எண்ணங்கள் வெளிப்படும். உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" என்றார்.

**தியானம் :** இன்றைய இறைவார்த்தைப் பகுதிகள் இறைவனது கட்டளைகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தோமேயானால் இசேுவின் அருளைக் கண்டடைவோம் என்பதை தெளிவுபடுத்துகின்றது. அதைப் கடைப்பிடித்து வாழாதிருந்தோமேயானால் அவர் எமக்குத் தரும் அருளைப் பெற்றுக்கொள்ள தகுதியற்றவர்களாகி விடுவோம். அன்று சிமியோன் திருச்சட்டத்தின்படி வாழ்ந்ததினால்தான் ஆண்டவர் அருளும் மீட்பைக் கண்டடையும் வரை இறக்கமாட்டேன் என்பதை தெளிவுபடுத்துகின்றார். அவ்வாறே காலம் வரும் பொழுது அம்மீட்பராகிய இயேசுவைக் கண்டு பேருவகை கொள்கின்றார். மேலும் கடவுள் அன்று சீனாய் மலையில் கொடுத்த 10 கட்டளைளை இறைமகன் இயேசு 2 கட்டளைகளாகக் கொடுத்திருக்கின்றார். (ஒரே சருவேசுரனை முழுமனதுடனே ஆராதிப்பாயாக. உன்னை அன்பு செய்வது போல் உன் அயலானையும் அன்பு செய்வாயாக என்று கூறுகின்றார். இவ்வாறு இறைவன் எமக்கு கொடுத்த கட்டளைகளின் படி நாங்கள் வாழ்கின்றோமா? சிந்திப்போம். ஏனெனில் நாங்களோ அதற்கு மாறாக பகைமை உணர்வு கொண்டவர்களாக, போட்டி மனப்பான்மை கொண்டவர்களாக போலி வாழ்க்கை வாழ்கின்றோம். இவ்வாறான வாழ்க்கை வாழாமல் சிமியோன் எவ்வாறு திருச்சட்டத்தைக் கடைப்பிடித்து இயேசுவை கரங்களில் ஏந்தப் பேறுபெற்றாரோ, அதேபோன்று நாங்களும் இறைவன் எமக்குக் கொடுத்த கட்டளைகளைக் கடைப்பிடித்து அவர் ஆசீரைப் பெற்றுக்கொள்ள பாவவாழ்விலிருந்து விடுபட்டு புதியதொரு வாழ்வு எம்மத்தியில் மலர இறைவன் பாதம் எங்களை ஒப்படைத்து உண்மை வாழ்வு வாழ்வோம்.